**செய்தி வெளியீடு எண் : 1427** **நாள் : 12.09.2024**

**செய்தி வெளியீடு**

# அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட இரண்டு நியாயவிலைக் கடைகளுக்கான கட்டங்களையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீனமயமாக்கப்பட்ட அண்ணாநகர் அமுதம் மக்கள் அங்காடியை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் இன்று (12.09.2024) திறந்து வைத்தார்கள்.

*******

தமிழ்நாட்டில் வேளாண் பெருங்குடி மக்களின் நலனுக்காக முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நுகர்வோர் நலன் கருதி அமுதம் சிறப்பங்காடிகளையும் நியாயவிலைக் கடைகளையும் நடத்தி வருகிறது.

சென்னையில், குறிப்பாக அண்ணா நகரில் பொதுமக்களுக்குத் தரமான மளிகைப் பொருட்களை நியாயமான விலையில் வழங்கிட அமுதம் சிறப்பங்காடி நவீனப்படுத்தப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமுதம் நியாயவிலைக் கடைகளுக்காக இரண்டு கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியாயவிலைக் கடைகள் பொலிவுடனும் வசதியுடனும் அமைந்திட வேண்டும் என்பதற்காக அவரே நியாயவிலைக் கடைகளுக்கான வடிவமைப்பை வழங்கியுள்ளார்கள். அதற்கேற்ப நியாயவிலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று அமுதம் சிறப்பங்காடிகளும் மக்களுக்குச் சிறப்பான சேவை வழங்கிடும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் அடையாளமாக இன்று (12.09.2024) அண்ணாநகரில் நவீனமயமாக்கப்பட்ட அமுதம் சிறப்பங்காடியையும் நியாயவிலைக் கடைகளுக்கான

இரண்டு புதிய கட்டடங்களையும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் திறந்து வைத்தார்கள். திறப்பு விழாவுக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்கள், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கே. மோகன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் திரு. நே. சிற்றரசு அவர்களும் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ,ஆ,ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் திரு. த. மோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப. ரங்கநாதன், அண்ணா நகர் மண்டலக் குழு தலைவர், திரு. கூபி. ஜெயின், அண்ணா நகர் 102 வது வார்டு கவுன்சிலர் திருமதி. ராணி ரவிச்சந்திரன் மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu